# பாதுகாவலர் முறை

(மன நலச் சட்டம் 1983ன் பிரிவு 7)

| | |
|---|---|
| 1. நோயாளியின் பெயர் | |
| 2. உங்கள் பாதுகாவலரின்<br>2.1 பெயர் | |
| 2.2 முகவரி | |
| 2.3 தொலைபேசி எண் | |
| 3. உங்களுக்கு பொறுப்பேற்றுள்ள உள்ளூர் சமூக சேவைகள் அமைப்பு | |

## பாதுகாவலர் முறை என்றால் என்ன?

மன நலச் சட்டம் 1983ன் பிரிவு 7ன் கீழ், மனநலக் குறைபாடுள்ள நபர்களுக்கு அது தேவைப்படும் என்று இரண்டு மருத்துவர்கள் கூறும் பட்சத்தில், அவர்களுக்கு உதவுவதற்காக ஒரு பாதுகாவலர் அளிக்கப்படலாம்.

உங்கள் பாதுகாவலர் உங்கள் உள்ளூர் சமூக சேவைகள் அமைப்பாகவோ அல்லது ஒரு சமூக சேவைகள் அமைப்பினால் ஒப்புதலளிக்கப்பட்ட நபராகவோ இருக்கலாம். உங்கள் பாதுகாவலர் ஒரு சமூக சேவைகள் அமைப்பாக இல்லாவிட்டால், அவர் “தனிப்பட்ட பாதுகாவலர்” என்று அழைக்கப்படுவார்.

பின்வருவனற்றை உங்களுக்குக் கூறும் சட்டபூர்வ அதிகாரம் உங்கள் பாதுகாவலருக்கு உண்டு:

– நீங்கள் எங்கு வாழ வேண்டும்
– குறிப்பிட்ட இடங்களில் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் மருத்துவ சிகிச்சை சந்திப்புகளுக்கான முன் பதிவு, பணி, கல்வி அல்லது பயிற்சியில் பங்கேற்றல்.
– மருத்துவரையோ அல்லது குறிப்பிட்ட மற்றொரு நபரையோ உங்களைப் பார்ப்பதற்கு அனுமதித்தல்.

## எனக்கு பாதுகாவலர் ஏன் தேவைப்படுகிறார்?

உங்களுக்கு மனநல குறைபாடு இருப்பதால், சமுதாயத்தில் வாழ்வதற்கு உங்களுக்கு உதவி தேவை மற்றும் உங்கள் சொந்த நலனுக்காகவோ அல்லது மற்றவர்களைப் பாதுகாக்கும் பொருட்டோ, உங்களுக்கு ஒரு பாதுகாவலர் தேவை என்று இரண்டு மருத்துவர்கள் கருதுதல்.

## இது எவ்வளவு காலத்திற்கு தொடரும்?

பாதுகாவலர் முறை முதலில் ஆறு மாதங்கள் வரை தொடரும்.

உங்களுக்கு பொறுப்பேற்றுள்ள மருத்துவரோ அல்லது உங்களுக்காக அமர்த்தப்பட்டுள்ள மருத்துவ உதவியாளரோ அவசியம் என்று நினைத்தால், உங்கள் பாதுகாவலர் ஏற்பாடு மேலும் ஆறு மாதங்களுக்கும், பின்னர் மீண்டும் ஒரே நேரத்தில் ஓராண்டு காலத்திற்கும் புதுப்பிக்கப்படலாம். அந்த நேரம் நெருங்கிவரும்போது இது குறித்து அவர்கள் உங்களிடம் பேசுவார்கள்.

உங்களுக்கு இன்னமும் பாதுகாவலர் தேவையா என்பதைக் கூறவேண்டியவர், உள்ளூர் சமூக சேவைகள் அமைப்பினால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ள, உங்களுக்கு பொறுப்பேற்றுள்ள மருத்துவத்துறை நிபுணரான மருத்துவர், அல்லது வேறொரு நபராக இருப்பவர். உங்களுக்கு தனிப்பட்ட பாதுகாவலர் இருந்தால், இந்நடைமுறைக்கு பதிலாக உங்களது “அமர்த்தப்பட்ட மருத்துவ உதவியாளர்” என்றழைக்கப்படும் மருத்துவரால் இது மேற்கொள்ளப்படும்.

## என்னால் மேல் முறையீடு செய்ய முடியுமா?

உங்களுக்கு ஒரு பாதுகாவலர் இருப்பதை நீங்கள் நிறுத்திவிட விரும்பினால், உங்கள் பாதுகாவலர், உங்கள் சமூக பணியாளர், உங்களுக்கு பொறுப்பேற்றுள்ள மருத்துவர், அல்லது உங்களுக்காக அமர்த்தப்பட்டுள்ள மருத்துவ உதவியாளரிடம் நீங்கள் பேச வேண்டும்.

உங்களுக்குள்ள பாதுகாவலர் முறையை முடித்துவிடும்படி கேட்பதற்கு நீங்கள் சமூக சேவைகள் அமைப்பிற்கும் எழுதலாம். உங்களுக்கு இன்னமும் பாதுகாவலர் தேவையா என்பதை முடிவு செய்வதற்குமுன், சமூக சேவைகள் அமைப்பிலிருந்து யாரேனும் உங்களுடன் பேச விரும்பக்கூடும்.

சமூக சேவைகள் அமைப்பிற்கும் எழுதுவதன் மூலம், உங்களுடைய மிக நெருங்கிய உறவினர் உங்கள் பாதுகாவலர் முறையை முடிவுக்குக் கொண்டுவரலாம். உங்களுடைய மிக நெருங்கிய உறவினர் யார் என்பதையும் இச்சிற்றேடு மேலும் விளக்குகிறது.

உங்களுக்கு இனிமேலும் பாதுகாவலர் இருக்கக்கூடாது என்று கூறும்படி ஒரு தீர்ப்பாயத்தை நீங்கள் கேட்டுக் கொள்ளலாம்.

## தீர்ப்பாயம் என்றால் என்ன மற்றும் என்ன நடக்கும்?

தீர்ப்பாயம் என்பது, உங்களுக்கு இனிமேலும் பாதுகாவலர் தேவையா என்பதை முடிவு செய்யக்கூடிய ஒரு தனிக் குழுவாகும். அது உங்களுடனும், நீங்கள் அறிந்துள்ள பணியாளர்களுடனும் ஒரு சந்திப்பை மேற்கொள்ளும். இந்த சந்திப்பு “விசாரணை” என்று அழைக்கப்படுகிறது. இந்த சந்திப்பு “விசாரணை” என்று அழைக்கப்படுகிறது. நீங்கள் விரும்பினால், உங்களுக்கு உதவுவதற்காக உங்களுடன் வரும்படி யாரையேனும் நீங்கள் கேட்டுக் கொள்ளலாம். நீங்கள் விரும்பினால், உங்களுக்கு உதவுவதற்காக உங்களுடன் வரும்படி யாரையேனும் நீங்கள் கேட்டுக் கொள்ளலாம். விசாரணைக்குமுன், தீர்ப்பாயத்தின் உறுப்பினர்கள் உங்களைப் பற்றியும் உங்களுக்கு அளிக்கப்படும் பாதுகாவலர் முறை பற்றியும் அறிக்கைகளைப் படிப்பார்கள். தீர்ப்பாயத்தின் உறுப்பினர்களில் ஒருவர் உங்களிடம் பேசுவதற்காக வருவார்.

## நான் எப்போது தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பிக்கலாம்?

உங்களுக்கு பாதுகாவலர் முறையின் முதல் ஆறு மாதங்களுக்கு எந்த நேரத்திலும் ஒருமுறை நீங்கள் தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பிக்கலாம். அதன்பின் இரண்டாவது ஆறு மாதங்களில் எந்த நேரத்திலும் ஒருமுறை நீங்கள் விண்ணப்பிக்கலாம் மற்றும் அதன்பின், நீங்கள் தொடர்ந்து பாதுகாவலர் முறையின் கீழ் உள்ள ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒருமுறை நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

நீங்கள் தீர்ப்பாயத்திற்கு மனு செய்ய விரும்பினால், பினவரும் முகவரிக்கு எழுதலாம்:

தி ட்ரிப்யூனல்ஸ் சர்வீஸ்
பிஓ பாக்ஸ் 8793
5வது ∴ப்ளோர்
லீசெஸ்டர்
LE1 8BN தொ.பே. 0845 2232022

உங்கள் சார்பாக தீர்ப்பாயத்திற்கு எழுதவும், விசாரணையின்போது உங்களுக்கு உதவவும் ஒரு வழக்கறிஞரை நீங்கள் கேட்டுக் கொள்ளலாம்.இதில் சிறந்து விளங்கும் வழக்கறிஞர்களின் பட்டியல் ஒன்றை சமூக சேவைகள் அமைப்பும், சட்ட சங்கமும் வைத்துள்ளன. இதன் பொருட்டு வழக்கறிஞர் அளிக்கும் உதவிக்காக நீங்கள் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. சட்ட உதவித் திட்டத்தின் கீழ் இச்சேவை இலவசமாக வழங்கப்படுகிறது.

## உங்கள் நெருங்கிய உறவினருக்குத் தெரிவித்தல்

உங்கள் நெருங்கிய உறவினருக்கு இச்சிற்றேட்டின் பிரதி ஒன்று அளிக்கப்பட வேண்டும் என்று மன நலச் சட்டம் கூறுகிறது.

உங்கள் நெருங்கிய உறவினராகக் கருதப்படும் நபர்களின் பட்டியல் ஒன்று மன நலச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளது. பொதுவாக, அந்தப் பட்டியலில் மிக உயர்ந்த இடத்திலுள்ள நபரே உங்கள் மிக நெருங்கிய உறவினராகக் கருதப்படுவார். இதனையும், உங்கள் பராமரிப்பு மற்றும் சிகிச்சை தொடர்பாக உங்கள் நெருங்கிய உறவினருக்கு என்ன உரிமைகள் உள்ளன என்பதையும் விளக்கும் சிற்றேடு ஒன்றை உங்கள் சமூக சேவைகள் அமைப்பினால் உங்களுக்கு அளிக்க முடியும்.

உங்கள் விஷயத்தில், எங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ள உங்கள் நெருங்கிய உறவினர்:

| |
|---|
| |

இந்நபர் சிற்றேட்டின் பிரதி ஒன்றைப் பெறுவதை நீங்கள் விரும்பவில்லை என்றால், தயவுசெய்து உங்கள் பாதுகாவலர், சமூக பணியாளர் அல்லது இச்சிற்றேட்டை உங்களிடம் அளித்த நபரிடம் கூறவும்.

உங்கள் நெருங்கிய உறவினராக இருப்பதற்கு இக்குறிப்பிட்ட நபர் பொருத்தமானவராக இல்லை என்று நீங்கள் நினைத்தால், அவருக்கு பதிலாக வேறொருவர் உங்கள் நெருங்கிய உறவினராகக் கருதப்பட வேண்டும் என்று கேட்டு நீங்கள் கவுன்டி நீதிமன்றத்திற்கு மனு செய்யலாம். இதனை விளக்கும் சிற்றேடு ஒன்றை உங்கள் சமூக சேவைகள் அமைப்பினால் உங்களுக்கு அளிக்க முடியும்.

## நடைமுறைக்கான நெறி

மன நலச் சட்டம் பற்றி உங்களுக்கு சிகிச்சை அளிப்பதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அறிவுரைகள் வழங்கும் நடைமுறைக்கான நெறி ஒன்று உள்ளது. உங்கள் பராமரிப்பு குறித்த முடிவுகளை எடுக்கும்போது, உங்கள் பராமரிப்பு குறித்த முடிவுகளை எடுக்கும்போது, இந்நெறி என்ன சொல்கிறது என்பதை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். நீங்கள் விரும்பினால், இந்நெறியின் பிரதி ஒன்றை பார்ப்பதற்காக கேட்டுப் பெறலாம்.

### மேற்கொண்டு உதவி மற்றும் தகவல்

உங்கள் பராமரிப்பு மற்றும் சிகிச்சை குறித்து நீங்கள் புரிந்து கொள்ளாதவை ஏதேனும் இருப்பின், தயவுசெய்து உங்கள் பாதுகாவலர், உங்கள் சமூக பணியாளர் அல்லது உங்கள் பராமரிப்புடன் தொடர்புடைய யாரேனும் ஒருவரிடம் கேட்கவும். நீங்கள் புரிந்துகொள்ளாத ஏதேனும் ஒன்று இந்த சிற்றேட்டில் இருந்தாலோ அல்லது இந்த சிற்றேடு விடை தராத மற்ற ஏதேனும் கேள்விகள் உங்களுக்கு இருந்தாலோ, தயவுசெய்து அவர்களிடம் விளக்கிக் கூறும்படி கேட்கவும்.

யாருக்காவது கொடுப்பதற்காக இச்சிற்றேட்டின் இன்னொரு பிரதி உங்களுக்கு தேவைப்பட்டால், தயவுசெய்து கேட்கவும்.